**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திருமதி.A.அன்னலெட்சுமி M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
வள்ளியூர்

2026 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 04–ஆம் நாள், செவ்வாய்க்கிழமை

**இ.ம.எண். 09/2026 ன் அ.வ.எண்.152/2012**

மகாலிங்கம் ...மனுதாரர்/வாதி

//எதிர்//

1. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்,
வடலிவிளை, அதன் ஆட்சிக்குழு தலைவர்,
S.முத்துக்கிருஷ்ணன் மூலம்

2. வட்டாட்சியர்,
இராதாபுரம்.

3. மாநில தேசிய நெடுஞ்சாலைத்துறை,
தமிழ்நாடு அரசு,
வள்ளியூர் கோட்டம்,
வள்ளியூர் அதன் பொறியாளர் மூலம்.

4. தமிழ்நாடு அரசு அதன்
மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி மூலம். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 16.07.2026–ம் தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.வீரமோகனராய் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.S.ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.R.ராஜகுமார் அவர்கள்

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:48:55 +0300

ஆஜராகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது மனுவில் கண்ட காரணங்களுக்காக, வடக்கு வள்ளியூர் கிராமம் பகுதி–1 கிராம நிர்வாக அலுவலரை உரிய ஆவணங்களுடன் மனுதாரர் தரப்பில் சாட்சியமளிக்க அனுமதி வழங்கக் கோரியும், அவருக்கு அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்ய உத்தரவிடக் கோரியும், உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 16 விதி 1 & 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி. மனுதாரர்/வாதி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு 1ம் தபசில் சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாகும். வழக்கு 2–ம் தபசில் சொத்து தமிழக அரசுக்கு பாத்தியப்பட்ட அரசு புறம்போக்கு ரோடு ஆகும். வழக்கு சொத்துக்களைப் பொறுத்து வருவாய்த்துறை ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வடக்கு வள்ளியூர் கிராமம் பகுதி–1 கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரணை செய்வது மிகவும் அவசியமாகும்.

சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்தால் மட்டுமே வழக்கில் உண்மை நிலையை மனுதாரரால் நிரூபிக்க இயலும். கிராம நிர்வாக அலுவலரை விசாரணை செய்வதால் பிரதிவாதிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

ஆகவே வடக்கு வள்ளியூர் கிராமம் பகுதி–1 கிராம நிர்வாக அலுவலரை வழக்கு சொத்துக்களான (1) சர்வே எண் 2032/1, ரீ சர்வே எண் 2344/2,

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.04 17:49:06 +0300

(2) நத்தம் சர்வே எண் 2336, ரீசர்வே எண்.2336/23 ஆகியவற்றின் புல வரைபடம், அ பதிவேடு நகல், சிட்டா நகல் முதலிய வருவாய் ஆவணங்களுடன் சாட்சியமளிக்க உத்தரவிட வேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

இந்த மனு சட்டப்படியும் உண்மை நிலவரங்களின் அடிப்படையிலும் ஏற்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டும். பத்தி 1 மற்றும் 2–ல் உள்ள அனைத்துக் குற்றச்சாட்டுகளும் பொய்யானவை. அட்டவணைச் சொத்து வாதிக்குச் சொந்தமானது என்று கூறுவது பொய்யாகும். மனுதாரருக்கு, மனுவின் 1 மற்றும் 2–ஆம் அட்டவணைச் சொத்துக்களில் எந்த உரிமையும், பட்டாவும், உடைமையும் இல்லை. 2–ஆம் அட்டவணைச் சொத்து ஒரு நெடுஞ்சாலைச் சாலையாகும். அது ஒரு பொதுச் சாலை.

மனுதாரர் வருவாய்ப் பதிவேடுகளைச் சமர்ப்பிக்க விரும்பினால், அவர் வருவாய்ப் பதிவேடுகளின் நகல்களைத் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம். வருவாய் பதிவேடுகள் அனைத்தும் பொதுப் பதிவேடுகள் ஆகும்.

முன்னதாக, மனுதாரர், வாதி தரப்பில் ராதாபுரம் வட்டாட்சியரை ஒரு சாட்சியாக விசாரிக்க I.A.8/2026 என்ற மனுவைத் தாக்கல் செய்திருந்தார். இந்த எதிர்வாதி விரிவான பதில் மனுவைத் தாக்கல் செய்ததால், I.A.8/2026 மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எதிர்வாதியால் I.A.8/2026 மனுவில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவானது, இந்த பதில் மனுவின் ஒரு பகுதியாகக் கருதப்படலாம்.

வழக்கில் அரசு பிரதிவாதிகளாக சேர்க்கப்படும்போது, வாதி தனது தரப்பில் சாட்சியம் அளிப்பதற்காக அரசு ஊழியர்களை அழைக்க முடியாது. வள்ளியூர் பகுதி–1 கிராம உதவி அலுவலர் (V.A.O.), ராதாபுரம் வட்டாட்சியர் மற்றும்

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:49:13 +0300

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் கீழ் பணிபுரிகிறார். எனவே, கிராம உதவி அலுவலரையும் வாதியின் சாட்சியமாக விசாரிக்க முடியாது.

முன்னதாக, ராதாபுரம் வட்டாட்சியரை விசாரிக்கக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண் 8/2026, இந்த மாண்புமிகு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது மீண்டும் மனுதாரர், வட்டாட்சியரின் கீழ் அரசு ஊழியராகப் பணியாற்றும் வி.ஏ.ஓ. வள்ளியூரை விசாரிக்க விரும்புகிறார். எதிர் தரப்பினரை சாட்சியாக வரவழைக்கும் நடைமுறை சட்டவிரோதமானது என்றும், அது நீதித்துறை விசாரணைக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் என்றும் பல்வேறு நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

மனுதாரர், இரண்டாம் பிரதிவாதியின் கீழ்நிலை கிராம ஊழியரை நீதிமன்றத்தின் மூலம் வரவழைத்து, அவரைத் தனது சாட்சியாக இருக்குமாறு கட்டாயப்படுத்த முடியாது. வட்டாட்சியருக்காக அரசு வழக்கறிஞர் ஆஜராகி, பிரதிவாதிக்காக ஆஜரான வாதியையும் குறுக்கு விசாரணை செய்துள்ளார்.

இந்நிலையில், இரண்டாம் பிரதிவாதியைத் தனது சாட்சியாக வரவழைக்க வாதிக்கு உரிமை இல்லை. இந்த நடைமுறையை நீதிமன்றத்தில் அனுமதிக்க முடியாது. 1999 I MLJ பக்கம் 679, எதிர் தரப்பினரை சாட்சியாக வரவழைப்பது கண்டிக்கத்தக்கது என்றும், அது நீதிமன்ற நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்துவது என்றும், சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு 2012 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுச்சாலை மீது மனுதாரருக்கு எந்த உரிமையும், தனிப்பட்ட உடைமையோ அல்லது பட்டாவோ இல்லை. மனுதாரர், 14 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த வழக்கை இழுத்தடிப்பதற்காக மனு மீண்டும்மீண்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:49:19 +0300

**3. <u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

2–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை 3, 4 எதிர்மனுதாரர்கள் தங்களுடையதாகவும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

மனுதாரரின் மனு சட்டபடியும், நியாயப்படியும் செல்லக்கூடியதல்ல. மனுதாரர் ஏற்கனவே 2, 3, 4 எதிர்மனுதார்களை கட்சியாக சேர்த்துள்ளார். வருவாய்துறை ஆவணங்களை பொறுத்து அவரது சாட்சியத்தின்போது கேள்விகள் எழுப்பி கொள்ளலாம்.

மேலும் வடக்கு வள்ளியூர் கிராமம் பகுதி 1 கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர் கட்சியாக சேர்க்கவில்லை. அவ்வாறு கட்சியாக சேர்க்காத பட்சத்தில், வருவாய் துறையினர் கட்சியாக இருந்த போதிலும் மேற்படி கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. மேலும் கட்சியாக சேர்க்கப்படாத நபரை சாட்சியம் அளிக்க நிர்பந்திப்பது ஏற்புடையதல்ல. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

**4.** இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், வழக்கு 1–ம் தபசில் சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், வழக்கு 2–ம் தபசில் சொத்து தமிழக அரசுக்கு பாத்தியப்பட்ட அரசு புறம்போக்குரோடு என்றும், எனவே வழக்கு சொத்துக்களைப் பொறுத்து வருவாய்த்துறை ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வடக்கு வள்ளியூர் கிராமம் பகுதி–1 கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரணை செய்வது மிகவும் அவசியமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.** இவ்வழக்கு  வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்து வருகிறது. வழக்கு சொத்துக்களைப் பொறுத்து வருவாய்த்துறை

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.04 17:49:26 +0300

ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வடக்கு வள்ளியூர் கிராமம் பகுதி–1 கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரணை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து நிலைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் தபசில் சொத்து, வழக்குரையில் அரசு புறம்போக்கு ரோடு என காட்டப்பட்டுள்ளது. PW1 தனது குறுக்கு விசாரணையில், "நான் இவ்வழக்கை தாக்கல் செய்யும் சமயம் அரசாங்கத்தை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2023 ம் வருடம் தான் அரசாங்கத்தை கட்சி சேர்த்தேன் என்றால் சரிதான். அரசாங்க அதிகாரிகள் யாரும் 1ம் தபசில் சொத்தில் என்னுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 ம் தபசில் சொத்தானது வருவாய் துறை ஆவணங்களில் அரசு புறம்போக்கு ரோடு என உள்ளது என்றால் சரிதான். அரசு புறம்போக்கு ரோடு என்பது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**6.** வழக்கு தாக்கல் செய்யும் போது, 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டுமே வழக்கை தாக்கல் செய்து, 2023ம் வருடம்தான் அரசாங்கத்தைக் கட்சி சேர்த்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும் அரசாங்க அதிகாரிகள் 1ம் தபசில் சொத்தில் வாதி((PW1) அனுபவத்தை இடைஞ்சல் செய்யவில்லை என்றும், 2–ம் தபசில் சொத்தானது வருவாய் துறை ஆவணங்களில் அரசு புறம்போக்கு ரோடு என ஒப்புக்கொண்டும் சாட்சியமளித்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

**7.** தாவா வழக்கானது நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும் நிலையில், IA.8/2026 மனுவினை மனுதாரர் தாக்கல் செய்து, 2ம் எதிர்மனுதாரரை சாட்சியாக விசாரிக்கக்கோரி மனுதாக்கல் செய்து, மனுதாரர் வலியுறுத்தாத காரணத்தால் கடந்த 12.06.2026

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:49:32 +0300

அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. இந்நிலையில் 2ம் பிரதிவாதியின் கீழ் செயல்படும் கிராம நிர்வாக அலுவலரை வாதி தரப்பு சாட்சியமாக விசாரிக்க மனு தாக்கல் செய்திருப்பது தாவா வழக்கிற்கு அவசியமற்றது. மேலும் வழக்கினை காலநீட்டிப்பு செய்வதற்காக இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவை அனுமதிப்பதற்கு போதிய முகாந்திரம் ஏதுமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவானது தள்ளபடி செய்யப்படுகிறது.

6. **இறுதியாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 04–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:49:40 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:49:48 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
வள்ளியூர்.

கூ.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

**இ.ம.எண்.09/2026 இன்**

**அ.வ.எண்.152/2012**

தேதி.04.08.2026